# Winmeen - Group 4 VAO General Tamil Model Test 8

1. ஜெர்மனி மொழியில் ஆண்பால், பெண்பால், பொதுப்பால் என்பவை முறையே எந்த உறுப்புகளாக பாகுபடுத்தப்படுகின்றன.
   A. கால் விரல்கள், கை விரல்கள், தலை B. கை விரல்கள், கால் விரல்கள், தலை
   C. வாய், மூக்கு, கண் D. மூக்கு, வாய், கண்
2. பொருத்துக

| எண்ணுப் பெயர்கள் | திராவிட மொழிகள் |
|---|---|
| (a) மூஜி | 1. மலையாளம் |
| (b) மூரு | 2. கன்னடம் |
| (c) மூன்று | 3. தெலுங்கு |
| (d) மூணு | 4. தமிழ் |
| (e) மூடு | 5. துளு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A. | 2 | 5 | 4 | 1 | 3 |
| B. | 2 | 5 | 4 | 3 | 1 |
| C. | 5 | 2 | 4 | 1 | 3 |
| D. | 5 | 2 | 1 | 4 | 3 |

3. முல்லைப் பெரியாறு அணை நீர் கீழ்க்கண்ட எந்தெந்த மாவட்டங்களின் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் பயன்படுகிறது .
   1. திண்டுக்கல், திருநெல்வேலி, மதுரை
   2. திண்டுக்கல், தேனி, மதுரை
   3. சிவகங்கை, இராமநாதபுரம்
   4. சிவகங்கை, கன்னியாகுமரி
   A. 1, 3 B. 2, 3 C. 2, 4 D. 1, 4
4. இலக்கணக்குறிப்புத் தருக – அடுபோர்
   A. பெயரெச்சம் B. வினை முற்று
   C. வினையெச்சம் D. வினைத் தொகை
5. "எழுந்தது துகள்
   ஏற்றனர் மார்பு
   கவிழ்ந்தன மருப்பு
   கலங்கினர் பலர்"
   என்ற அடிகள் இடம்பெற்ற நூல்
   A. நற்றிணை B. அகநானூறு
   C. கலித்தொகை D. குறுந்தொகை
6. 1863 ஆம் ஆண்டு ____ என்பவர் சென்னை பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார்
   A. எர்னஸ்ட் காசிரர் B. பாப்லோ நெருடோ
   C. இராபர்ட் புரூஸ்புட் D. மல்லார்மே
7. கவிஞர் வைரமுத்து அவர்கள் எந்த ஆண்டு கள்ளிக்காட்டு இதிகாசம் என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றார் ?

A. 2001 B. 2002 C. 2003 D. 2004

8. கீழ்க்கண்டவற்றுள் நான்கறிவுள்ள உயிர்கள் எவை?

1. சிப்பி 2 . நண்டு 3. நத்தை 4. தும்பி

A. 1, 2 B. 2 , 3 C. 2 , 4 D. 1 , 3

9. குழந்தையை பாதுகாப்போம் என்ற அமைப்பின் மூலம் இதுவரை கல்வி பெற்ற குழந்தைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

A. 80000 B. 800000 C. 8000 D. 8000000

10. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக – விளைவது

A. விளைவு + அது B. விளை+ வ் + அது

C. விளை + வ் + அ + து D. விளைவு + அ + து

11. " சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமான் நன்கலம் "
என்னும் பாடலடி இடம்பெற்றுள்ள நூல்

A. புறநானூறு B. அகநானூறு

C. கலித்தொகை D. மணிமேகலை

12. " உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து "
இக்குறளில் பயின்று வரும் அணி

A. உவமை அணி B. எடுத்துக்காட்டுவமை அணி

C. ஏகதேச உருவக அணி D. உருவக அணி

13. " பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும் "
இதில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்

A. பூஞ்சோலை B. காகம்

C. நாகணவாய்ப் பறவை D. வண்டுகள்

14. புலவர் குழந்தை அவர்கள் எத்தனை நாட்களில் திருக்குறளுக்கு உரை எழுதினார் ?

A. 24 B. 25 C. 52 D. 42

15. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக – இறைஞ்சி

A. இறை + ச் + இ B. இறைஞ்சு + இ

C. இறை + ஞ் + சி D. இறை +ஞ் + ச் + இ

16. " அள்ளல் பழனத்து அரக்காம்பல்வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப்பு ள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் "
இவ்வரிகள் எந்நாட்டின் வளத்தைக் கூறுகின்றன ?

A. சேரநாடு B. சோழநாடு

C. பாண்டிய நாடு D. வட நாடு

17. ந.பிச்சமூர்த்தி அவர்கள் எந்த ஆண்டு கலைமகள் பட்டம் பெற்றார்?

A. 1931 B. 1932 C. 1934 D. 1935

18. " நமது மகிழ்ச்சியின் தோற்றுவாயும் துயரத்தின் சுரங்கமும் நாமே, நீதியின் இருப்பிடமும் அநீதியின் அஸ்திவாரமும் நாமே ' என்று கூறியவர் யார்?

A. நபிகள் நாயகம் B. உமர் கய்யாம்

C. பெரியார் D. ந.பிச்சமூர்த்தி

19. Altruism என்பது தமிழில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
A. ஒழுக்கவியல் B. ஆளுமை
C. மனித நேயம் D. பிறர் நலவியல்
20. தனிநாயகம் அடிகள் தொடங்கி,இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கும் இதழ் எது?
A. தமிழ்நாடு B. தமிழர் நாகரிகம்
C. தமிழ்ப் பண்பாடு D. தமிழர் பண்பாடு
21. கீழ்க்கண்டவற்றுள் மசானபு ஃபுகோகா உலகிற்கு கூறிய ஐந்து விவசாய மந்திரங்களில் கூறப்படாதது எது / எவை?
1. உழப்பட்ட நிலம்
2. இரசாயன உரம் இல்லாத உற்பத்தி
3. பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப் பாதுகாப்பு
4. தண்ணீர் நிறுத்தும் நெல் சாகுபடி
5. ஒட்டு விதை இல்லாமல் உயர் விளைச்சல்
A. 1, 3 B.3, 4 C. 1,4 D. எதுவுமில்லை.
22. மன உளைச்சல் தீர்வும் வீட்டில் உலை கொதிக்கவும் உழைக்க வேண்டும்" இத்தொடரில் உள்ள மயங்கொலி சொற்கள் யாவை?
A. உளைச்சல், தீரவும், வீட்டில் B. உளைச்சல், உலை , உழைக்க
C. உலை, தீரவும், வீட்டில் D. உழைக்க, தீரவும், உலை
23. "இளமின்னார் பொன்னரங்கில் நடிக்கும் – முத்து
ஏந்தி வாவித் தரங்கம் வெடிக்கும் "
என்ற வரிகள் குறிக்கும் நாடு
A. வடகரை நாடு B. தென்கரை நாடு
C. வட ஆரியர் நாடு D. தென் ஆரியர் நாடு
24. மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி என குறிப்பது ___
A. அகத்திணையியல் B. புறத்திணையியல்
C. இரண்டும் D. இரண்டு மில்லை
25. "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆய மகள்" என கூறும் நூல்
A. நற்றிணை B. புறநானூறு
C. கலித்தொகை D. குறுந்தொகை
26. தவறான இணையை தேர்ந்தெடு
A. எழுதுக -எழுது + க B. உரைத்த - உரை+த் + த் + அ
C. செய்தல் - செய்து + அல் D. படித்து - படி +த்+த் + உ
27. திருக்குறளின் அறத்துப்பால் , பொருட்பால், இன்பத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை முறையே
A. 70, 38, 25 B. 38, 70, 25
C. 38, 25, 70 D. 25, 38,70
28. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது
A. தனிப்பட்ட மூளை கனத்துக்கும் புத்திசாலித்தனத்துக்கும் உறவில்லை.
B. மூளை அளவுக்கும் உடல் அளவுக்கும் உள்ள உறவு முக்கியமல்ல.
C. தேனீக்களின் மூளைக்கு 100 மைக்ரோ வாட் சக்தி தேவைப்படுகிறது.
D. மனித மூளையானது முன் மூளை, பின் மூளை, சிறு மூளை என 3 பகுதிகளாக பிரிக்கப்படுகிறது.

29. "யாதினு மாழ்கும்அம் மாழ்கியும் என்றுழி "
 இதில் மாழ்கி என்பதன் பொருள்
 A. பழத்தோல்  B.மயங்குதல்
 C. தொட்டால் சுருங்கி தாவரம்  D. அறிவு
30. 2030குள் இந்தியாவின் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு உயரும் என கணிக்கப்பட்டுள்ளது
 A. 8 கோடியே 5 லட்சம்  B. 7 கோடியே 8 லட்சம்
 C. 5 கோடியே 10 லட்சம்  D. 8 கோடியே 70 லட்சம்
31. 1453 ம் ஆண்டின் தொடக்கத்தில் அச்சு இயந்திரத்தை வடிவமைத்தவர் யார் அவர் எந்த நாட்டை சேர்ந்தவர்
 A. ஜான் கூட்டன்பர்க் – இங்கிலாந்து  B. ஜான் கூட்டன் ப்ர்க் – ஜெர்மனி
 C. தாமஸ் மன்றோ – இங்கிலாந்து  D. தாமஸ் மன்றோ – ஜெர்மனி
32. சீருடைமுறை, தாய்மொழிவழிக் கல்வி போன்றவற்றைக் கட்டாயமாக்கியது எந்த கல்விக் குழு
 A. மெக்காலே கல்விக் குழு - 1835  B. ஹண்டர் கல்விக் குழு - 1882
 C. சார்லஸ் வுட் கல்விக் குழு – 1854  D. ஹண்டர் கல்விக் குழு – 1854
33. "அவர்கள் மூளையில் விதையைப் போல்
 தூவப்பட வேண்டிய அறிவு
 ஆணியைப் போல அறையப்படுகின்றது "
 இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமை எவ்வகையை சார்ந்தது
 A. வினை உவமை  B. பயன் உவமை
 C. மெய் உவமை  D. உரு உவமை
34. "அந்த காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது, முக்கியமில்லாதது என்று கூட கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்" என்று கூறியவர்
 A. அண்ணா  B. திரு.வி.க
 C. உ.வே.சா  D. வ.வே.சு
35. உமறுபுலவரை ஆதரித்தவர்கள் யாவர்?
 1. நபிகள் நாயகம்  2. அபுல் காசிம்மரைக்காயர்
 3. பனி அகமது மரைக்காயர்  4. வள்ளல் சீதக்காதி
 A. அனைத்தும் சரி  B. 1, 2
 C. 2 , 4  D. 3, 4
36. ஆசிரியப்பாவின் இறுதி அடியின் இறுதி எழுத்து கீழ்க்கண்ட எந்த ஈறுகளை கொண்டு முடியும்.
 A. ஏ, கே, இன், எ  B. ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ
 C. ஏ, கே, ஈ, இன், ஐ  D. எ , ஈ, இன்
37. ஒரு பெண் இறைவனைப் பழிப்பது போலவும் இன்னொருத்தி
 இறைவனது செயலை நியாயப்டுத்துவது போலவும் பாடப்படுவது ___ எனப்படும்
 A. முக்கூடற்பள்ளு  B. குற்றாலக் குறவஞ்சி
 C. திருச்சாழல்  D. மொழிச்சாழல்
38. "காற்றைத் தவிர ஏதுமில்லை" என்னும் இசைத் தொகுப்பை இளையராஜா யாருடன் இணைந்து வெளியிட்டார்
 A. ஏ.ஆர்.ரஹ்மான்  B. ஹரிபிரசாத் சௌராஸியா
 C. கங்கை அமரன்  D. யாருமில்லை

39. சங்கரதாசு சுவாமிகள் தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை என்னும் நாடக அமைப்பை உருவாக்கி ஆசிரியராக பொறுப்பேற்ற ஆண்டு
A. 1916 B. 1917 C. 1918 D. 1919
40. “மனித சிந்தனையே , கற்பனைக்கும் எட்டாத பேராற்றலே, நீ சிந்தித்தவற்றில் சிறந்தவற்றை என்னிடம் ஒரே ஒரு முறை கூறு.
அதனை நான் எட்டுத் திசையிலும் பரப்பி மனித ஜாதியை நீ சொன்ன இடத்திற்கு அழைத்து வருகிறேன் " என்பது யாருடைய பிரார்த்தனையாக இருந்தது
A. மீரா B. அண்ணா
C. ஜீவானந்தம் D. சுந்தர ராமசாமி
41. சரியான பொருளைத் தேர்ந்தெடு.
ஒதுக, முழக்கம்
A. கேட்டல், சத்தம் B. சொல்க, ஓங்கி உரைத்தல்
C. கேட்டல், ஒலி D. ஒலி, ஒளி
42. "நின்றார் → நில்(ன்) + ற் + ஆர் "
இதில் ' ஆர்' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்
A. ஆண்பால் வினைமுற்று விகுதி B. பலர்பால் வினைமுற்று விகுதி
C. வினையாலணையும் பெயர் D. ஒன்றன்பால் வினைமுற்று விகுதி
43. சதுரங்க விளையாட்டின்போது வெவ்வேறு அதிகாரங்களைப் பெறும் காய்கள் பெட்டிக்குள் வந்த பின் சமமாகின்றன. மனிதர் நிலையும் அத்தன்மையதே என்று கூறும் ஹைக்கூவை எழுதியவர் யார்?
A. மோரிடாகே B. பாஷோ
C. இஸ்ஸா D. பிரமிள்
44. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக - வென்றேன்
A. வென்று + ஏன் B. வென் + ற் + ஏன்
C. வெல்(ன்) + ற் + ஏன் D. வென்று + ற் + ஏன்
45. இலக்கணக் குறிப்புத் தருக .
கண்மலர், வென்றி
A. உவமை, வினையெச்சம் B. உருவகம்,மெலித்தல் விகாரம்
C. உவமை, மெலித்தல் விகாரம் D. உருவகம் , வினையெச்சம்
46. "போதியின் நிழலும் சிலுவையும் பிறையும்
பொங்கும் சமத்துவப் புனலில் கரையும் "
என்னும் வரிகள் இடம்பெற்றுள்ள கவிதை
A. மனோன்மனீயம் B. ஒவ்வொரு புல்லையும்
C. திண்ணையை இடித்து தெருவாக்கு D. பாரதியார் கவிதைகள்
47. "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும், வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்" என்னும் விதிகளின் படி புணர்ந்து வரும் சொல் எது?
A. பேரழகு B. காலத்தச்சன்
C. உழுதுமுது D. சென்ற
48. சரியான இணையைத் தேர்ந்தெடு.
1. . / - முற்றுப்புள்ளியை நீக்கவும்
2. ? / - வினாக்குறி அடையாளத்தை நீக்கவும்.

3. ! / - வியப்புக் குறியை நீக்கவும் .

A. அனைத்தும் சரி
B. 1 மட்டும் சரி
C. 2 , 3 சரி
D. அனைத்தும் தவறு

49. பேச்சு மொழியை கவிதையில் பயன்படுத்துபவர்களில் எத்தனை வகையினர் உள்ளனர்?

A. 2
B.3
C. 4
D. 5

50. "நேரடி மொழிதான் ஒரு கவிஞரை நிகழ்காலத்தவரா அல்லது இறந்த காலத்தவரா என்பதை நிர்ணயிக்கிறது" என்று கூறியவர் யார்?

A. வால்ட் விட்மன்
B. மல்லார்மே
C. இந்திரன்
D. ஆற்றூர் ரவிவர்மா

51. 'புனையா ஓவியம்' என்பதன் பொருள்

A. வண்ணம் தீட்டப்பட்ட ஓவியம்
B. பூக்களால் வரைவது
C. மூலிகைகளால் தீட்டப்பட்ட ஓவியம்
D. கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவது

52. "முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை" என்று கூறியவர்?

A. தொல்காப்பியர்
B. பவணந்தி முனிவர்
C. தண்டியடிகள்
D. புலவர் குழந்தை

53. 'அப்பிசி மாசம் அடமள இம்பாங்க' – இத்தொடரின் பிழைநீக்கிய வடிவம்

A. ஐப்பசி மாசம் அடமழைம்பாங்க
B. ஐப்பசி மாதம் அட மழை என்பாங்க
C. ஐப்பசி மாதம் அடைமழ என்பார்கள்
D. ஐப்பசி மாதம் அடை மழை என்பார்கள்

54. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தில் பாடப்பட்ட மன்னன்

A. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை
B. பல்யானை செல்கெழுகுட்டுவன்
C. செல்வக் கடுங்கோ வாழியாதன்
D. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்

55. பொருத்துக.

(a) தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் — 1. தண்ணீர்,தண்ணீர்
(b) சூரியநாராயணசாத்திரியார் — 2. இசைநூல்
(c) கோமல் சுவாமிநாதன் — 3. கருணாமிர்த சாகரம்
(d) முதுநாரை — 4. மானவிஜயம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A. | 4 | 3 | 2 | 1 |
| B. | 2 | 4 | 3 | 1 |
| C. | 3 | 4 | 1 | 2 |
| D. | 1 | 2 | 4 | 3 |

56. பாந்தள், உரகம், பன்னகம், பணி என்னும் சொற்களின் பொருள் ____ என்பதாகும்.

A. கரடி
B. யானை
C.முதலை
D. பாம்பு

57. திருக்கோட்டியூர் நம்பியால் 'எம்பெருமானார் ' என்று அழைக்கப்பட்டவர் யார்?

A. நாதமுனிகள்
B. இராமாநுசர்
C. திருவரங்கத்தமுதனார்
D. மணவாள மாமுனிகள்

58. கீழே தரப்பெறுவனவற்றுள் சரியானவை எவை?

1. நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்

2. நாம், யாம் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்

3. வேற்றுமை உருபேற்கும் போது,'யான்' என்பது 'எம்'என்றும், ' நாம்' என்பது 'நம்' அன்றும் திரியும்.

4. நீ, நீர், நீவிர், நீயிர், நீங்கள் என்பன முன்னிலை ஒருமைப் பெயர் ஆகும்.

A. 1, 3, 4 சரி B. 1, 2, 3 சரி

C. 2, 4, 1 சரி D. 4, 3 , 1 சரி

59. 'இருட்டறையில் உள்ளதடா உலகம்' எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?

A. பாரதியார் B. பாரதிதாசன்

C. கவிமணி D. நாமக்கல் கவிஞர்

60. 'கள்ளர் சரித்திரம்' என்னும் உரைநடை நூலை எழுதியவர்

A. ந.மு.வேங்கடசாமி நாட்டார் B. இரா.பி.சேதுப்பிள்ளை

C. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் D. மு.வரதராசனார்

61. 'மயங்கி மறுகிற் பிணங்கி வணங்கி
உயங்கியொருவர்க்கொருவர்' –
இப்பாடலடியின் ஆசிரியர் யார்?

A. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் B. கம்பர்

C. குமரகுருபரர் D. ஒட்டக்கூத்தர்

62. ' எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்' இந்த அடியில் அமைந்துள்ள மோனை வகையைத் தேர்ந்தெடு.

A. கீழ்க்கதுவாய் B. இணை

C. கூழை D. மேற்கதுவாய்

63. புகைப்பழக்கத்தை கதைக்கருவாகக் கொண்ட 'மெல்லமெல்ல மற' என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

A. இலட்சுமி B. சுஜாதா

C. சுபா D. தாமரை

64. தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்று கூறியவர்

A. அம்பேத்கர் B. கெல்லட்

C. கமில்சுவலபில் D. முனைவர் எமினோ

65. 'கேண்மை' – இச்சொல்லின் எதிர்ச்சொல்

A. துன்பம் B. பகை

C. நட்பு D. வலிமை

66. பொருத்துக

(a) வண்மை 1. கொடை

(b) அவல் 2. வயல்

(c) செய் 3. பள்ளம்

(d) மடவாள் 4. பெண்

| | | | | |
|---|---|---|---|---|
| A. | 1 | 2 | 3 | 4 |
| B. | 2 | 1 | 4 | 3 |
| C. | 1 | 3 | 2 | 4 |
| D. | 4 | 3 | 2 | 1 |

67. இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் எனத் தன் கல்லறையில், எழுதி வைத்தவர்

A. டாக்டர் கிரௌல் B. கால்டுவெல்

C. ஜி.யு.போப் D. வீரமாமுனிவர்

68. அகநானூற்றில் உள்ள களிற்றியானை நிரையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை

A. 120 B. 180 C. 100 D. 150

69. “எரிந்திலங்கு சடைமுடி முனிவர்
புரிந்து கண்ட பொருளமொழிந்தன்று "
என்ற வரிகள் இடம் பெற்ற நூல்

A. அகநானூறு B. புறநானூறு
C. புறப்பொருள் வெண்பாமாலை D. ஐங்குறுநூறு

70. படப்பிடிப்புக் கருவியில் ஓரடி நீளமுள்ள படச்சுருளில் எத்தனைப் படங்கள் வீதம் ஒன்றன் பின் ஒன்றாக எடுக்கப்படுகிறது?

A. 12 B. 16 C. 18 D. 24

71. மாணிக்கவாசகர் குறித்த கூற்றுகளில் தவறானது எது?

A. திருவாசகமும் திருக்கோவையும் மாணிக்கவாசகர் அருளினார்
B. திருப்பெருந்துறை இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலை எழுப்பினார்
C. இவரது காலம் 12 ம் நூற்றாண்டு
D. அமுது அடியடைந்த அன்பர்

72. பொருத்துக

(a) வேலினை கையில் ஏந்தியவள் 1. பிடாரி
(b) இறைவனை நடனமாடச் செய்தவள் 2. காளி
(c) தாருகன் மார்பை பிளந்தவள் 3. துர்க்கை
(d) காட்டை இடமாகக் கொண்டவன் 4.பத்ரகாளி
(e) கன்னியர் எழுவருள் இளையவள் 5. கொற்றவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A. | 5 | 4 | 1 | 2 | 3 |
| B. | 1 | 2 | 3 | 4 | 5 |
| C. | 5 | 4 | 3 | 2 | 1 |
| D. | 3 | 4 | 5 | 1 | 2 |

73. மனிதனின் மனநிலையை இருள், மருள்,தெருள், அருள் எனக் கூறியவர் யார்?

A. வள்ளலார் B. பெரியார்
C. அண்ணா D.முத்து ராமலிங்கர்

74. ஞாயிறை சுற்றிய பாதையை ஞாயிறு வட்டம் என்று எந்நூல் வாயிலாக அறியப்படுகிறது

A. சிலப்பதிகாரம் B. திருக்குறள்
C. புறநானூறு D. கம்பராமாயணம்

75. திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவான தேசிக மூர்த்திக்கு தொண்டராய் இருந்தவர் யார்?

A. குமரகுருபரர் B. ஈசானதேசிகர்
C. மயிலேறும் பெருமாள் C. மீனாட்சி சுந்தரனார்

76. ஆத்திச்சூடி வெண்பா, திலகர்புராணம்,குழந்தை சுவாமிகள் பதிகம், இராமலிங்க சுவாமிகள் சரிதம் போன்றவற்றை இயற்றியவர் யார்?

A. அம்புஜத்தம்மாள் B. நீலாம்பிகை அம்மையார்
C. அசலாம்பிகை அம்மையார் D. சங்கரதாஸ் சுவாமிகள்

77. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?
   A. தமிழ் மூவாயிரம் – திருமந்திரம்
   B. ஞானோபதேசம் – வீரமாமுனிவர்
   C. கிறிஸ்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் – தேம்பாவணி
   D. வக்கபாகையை ஆண்டவரபதி ஆட்கொண்டான் – ஒட்டக்கூத்தர்
78. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?
   A. கம்பராமாயணம் - புட்பக விமானம்
   B. சீவகசிந்தாமணி - மயிற்பொறி விமானம்
   C. தூமகேது - வால் நட்சத்திரம்
   D. வியாழன் - கந்தகம்
79. எத்தனை விழுக்காடு அளவிறகுத் தமிழ், திராவிட மொழிக் கூறுகளைக் கொண்டுள்ளது ?
   A. 50 B. 60 C. 70 D. 80
80. ஆறு வயதில் ஹெலன் கெல்லர் சேர்ந்த பள்ளியின் பெயர்
   A. ஹோரஸ்மான் பள்ளி B. பெர்கின்ஸ் பள்ளி
   C. ரைட் ஹூமாசன் பள்ளி D. கேம்ப்ரிட்ஜ் பள்ளி
81. எம்.ஜி.ஆர் அவர்களுக்கு இந்திய மாமணி விருது வழங்கப்பட்ட ஆண்டு
   A. 1982 B. 1986 C. 1987 D. 1988
82. மணமுழா, நெல்லரிகிணை ஆகியவை எந்நிலத்திற்குரிய பறைகள்
   A. குறிஞ்சி B. முல்லை
   C. மருதம் D. நெய்தல்
83. நளவெண்பா காப்பியத்தில் உள்ள மொத்தப் பாடல்கள் எத்தனை?
   A. 400 B. 401 C. 431 D.451
84. கீழ்க்கண்ட இணைகளை ஆராய்க
   1. அம்பேத்காரின் முதல் போராட்டம் – 1927
   2. அம்பேத்கர் மரணம் – 1956
   3. அம்பேத்கர் பாரத ரத்னா – 1990
   4. அம்பேத்கர் முனைவர் பட்டம் – 1915
      A. 1, 4 தவறு B. 4 தவறு
      C. 1, 2,4 சரி D. 3 தவறு
85. கற்போரின் மனதிலுள்ள அரியாமையை போக்கி அவரை குன்றின் மேலிட்ட விளக்காக சமுதாயத்தில் திகழச் செய்யும் நூல் எது?
   A. சிறுபஞ்சமூலம் B. ஏலாதி
   C. திரிகடுகம் D. இனியவை நாற்பது
86. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதது எது?
   A. கண்ணுதல் – இலக்கணப்போலி
   B. சொற்பதம் - ஒரு பொருட்பன்மொழி
   C. விருந்து - தொழிலாகு பெயர்
   D. இன்னாச் சொல் – ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
87. மனோன்மணீயம் குறித்த கூற்றுகளில் எது தவறானது ?
   A. நடிப்புசெவ்வியும் இலக்கிய செவ்வியும் ஒருங்கே அமையப் பெற்ற நூல்

B. லிட்டன் பிரபுஆங்கிலத்தில் எழுதிய இரகசிய வழி நூலினை தழுவி அமைந்தது.

C. வழிநூல் என அழைக்கப்படுகிறது.

D. சிவகாமி சரிதம் எனும் துணைக் கதை இதில் உள்ளது.

88. தந்தை பெரியாரிடத்திலும் பேரறிஞர் அண்ணாவிடத்திலும் நெருங்கி பழகியவர் யார்?

A. முடியரசன் B. கண்ணதாசன்

C. சிற்பி D.நா. காமராசன்

89. வெ.இராமலிங்கனார் குறித்த கூற்றுகளில் தவறானது எது?

A. இராமலிங்கனார் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் பிறந்தார்.

B. முத்தமிழிலும் ஓவியக் கலையிலும் வல்லவர்

C. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு பெற்றதற்காக சிறை தண்டனைப் பெற்றார்.

D. தமிழ்நாட்டின் முதல் அரசவைக் கவிஞர்

90. நீதித் திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில் ஓதித் தொழுது எழுக ஓர்ந்து என்று கூறியவர் யார்?

A. கபிலர் B. பரணர்

C. மருதனார் D. கவிமணி

91. தவறான இணை எது?

A. escalator – மின்தூக்கி B. E magzine – மின் இதழ்கள்

C. Compact disc - குறுந்தகடு D. Intelligence – நுண்ணறிவு

92. " இந்திய நூலக அறிவியலின் தந்தை “ என அழைக்கப்படுபவர் யார்?

A. இரா. அரங்கநாதன் B. ராதாகிருஷ்ணன்

C. அரங்கசாமி D. ராமகிருஷ்ணன்

93. மாமல்லபுரத்தில் சிற்பக் கலையின் உச்சம் அன்று குறிப்பிடப்படுவது எது?

A. கிருஷ்ணரின் வெண்ணைப் பந்து B. பஞ்சபாண்டவர் ரதம்

C. ஒற்றைக் கல்யானை ஈ) அர்ச்சுணன் தபசு

94. சரியான இணை எது?

A. விளைவுக்கு - தேன் B. அறிவுக்கு – வேலை

C. இளமைக்கு – பால் D. புலவருக்கு – தோல்

95. "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல மற்றவர் மனதில் நீ வாழும் வரை " என்று கூறியவர்

A.கலில் கிப்ரான் B. அன்னை தெரசா

C. கைலாஷ் சத்யார்த்தி D. வள்ளலார்

96. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி எது?

A. சமவெளி பகுதி B. கடற்கரை பகுதி

C. துருவப் பகுதி D. மலைப் பகுதி

97. முடியரசன் வாழ்ந்த காலம் எது?

A. 1930 – 1998 B. 1928-1998

C. 1920 - 1998 D. 1920 – 1978

98. The old man and the sea நோபல் பரிசு பெற்ற ஆண்டு?

A. 1952 B. 1953 C. 1954 D. 1955

99. "தமிழே உன்னை நினைக்கும்

தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும் "

என்ற வரிகள் யாருடையது?

A. பாரதியார் B. பாரதிதாசன்

C. பெருஞ்சித்திரனார் D. காசி ஆனந்தன்

100. கீழ்க்கண்டவற்றுள் இடஞ்சுழி எழுத்துகள் அல்லாதது எது?

A. ட B. ய C. ழ D. ஞ

winmeen.com

## Group 4 VAO General Tamil Model Test 8 – Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| C | C | B | D | C | C | C | C | A | C |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| B | C | D | B | B | A | B | B | D | C |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| C | B | B | A | C | C | B | A | C | D |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| B | B | A | D | C | B | C | B | C | C |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| B | B | C | C | B | B | B | D | B | D |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| D | A | D | D | C | D | B | B | B | A |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| D | A | A | B | B | C | C | A | C | B |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| C | C | D | C | B | C | D | D | D | B |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| D | C | C | B | C | C | C | A | C | D |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| A | A | D | C | B | C | C | C | D | D |

winmeen